# தங்கத்துரைக் காவியம்



மூதூர் .எம். எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்துரைக் காவியம்

மூதூர்

எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


❖ நூலின் பெயர் - தங்கத்துரைக் காவியம்

❖ விடயம் - காவியம் (கவிதை)

❖ ஆசிரியர் - மூதூர் எம். எம். ஏ. அனஸ்

❖ வெளியீடு - உமர் நெய்னார் புலவர் கழகம் மூதூர்

❖ உரிமை - நூலாசிரியருக்கு

❖ முதற் பதிப்பு - ஓகஸ்ட் - 2016

❖ பிரதிகள் - 500

❖ ISBN - 978 - 955 - 42444 - 4 - 3

❖ விலை - 250 ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து தமிழ் முஸ்லீம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்பு நல்கிவரும் மனிதாபிமானத் தன்மை நிறைந்த என் நேசத்திற்குரிய திரு.எஸ்.பத்மசீலன் (அதிபர்) அவர்கட்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

- அமைதிப்பூக்கள் (கவிதை)
- மூதூர் உமர் நெய்னார் புலவர் கவிதைகள் (தொகுப்பு)
- மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராண உரை (மறுபதிப்பு)
- கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன்கவிதைகள் (தொகுப்பு)
- நாயகக்காவியம் (கிழக்குமாகாணசாகித்தியவிருதுபெற்றது)
- ஊர் துறந்த காவியம்
- அன்பின் மகனுக்கு (கடிதங்களின் தொகுப்பு)
- அதி மேதகு ஜனாதிபதிக்கு ஓர்மடல்
- மனிதம் (கவிதை)
- இஸ்லாமியக் குறள்
- அஸ்ர.்.ப் அமரகாவியம்
- வாப்புமரைக்கார் வழிக்காவியம்
- வசந்தம் (கவிதை)
- மழலைக் கீதம் (சிறுவர்பாடல்கள்)
- கவிஞர் மூதூர்எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள்
- கவிஞர் மூதூர்எஸ்.எல்.எம்.முகைதீனின் கவிதைகளில் மூதூர் மீனவர் உயர்ச்சி நாட்டம்
- யதார்த்தம் (கவிதை)
- எந்தன் ஊரே? (கவிதை)
- நண்பனை நவிலும் நா (கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுப்பா

## தமிழ்பேசும் மானிடரின் கதை

தங்கத் துரையென்னும்
தங்கமகன் சரித மதை
இங்கோர் காவி யமாய்
இனிதே படைத்திடவே,
முன்வந்த தம்பி "அனஸ்"
முத்தூர் தந்த மகன்!
அன்னோன் தமிழ், முஸ்லிம்
ஐக்கியத்தை விரும்பு பவன்!

இலக்கியத்தில் காதல் மிக்க
இளவலிவன் எழுத்தாள்வோன்!
இலக்கியநூல் பத்தி ரண்டு
இதுவரையில் எழுதி யுளான்!
நலமான சிந்த னையும்
நன்மார்க்கப் பற்று தலும்
வளமான தமிழ றிவும்
வரமாகப் பெற்ற "அனஸ்" !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபோட்டிப் பரிசுடனே
பாராட்டுபல பெற்றோன்!
கிழக்கென்னும் மா காணக்
கீர்த்திமிகு சாகித்ய
நலமான விருது" பெற்ற-
"நாயகக் காவி யத்தை"
உலகோர் உவந் தேர்க்க
உன்னதமாய்ப் படைத்துள்ளான்!

விலைபோகா உயர் கொள்கை
வியக்கும் தன்னடக்கம்,
குலையாத குறிக் கோளில்
குரிசிலென நடை பயில்வோன்!
மலைபோலும் மன வுறுதி
மாலைகண்டு மயங்காதோன்,
"தலையில் கனம் உள்ளோன்"
தலைக்கனமே இல்லாதோன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குணந லத்தான்
　　இனிய "அனஸ்" செய்த ளித்த-
முத்தான காவி யத்தை
　　முழுவுலகும் வர வேற்கும்!
'தங்கத்துரை" என்னு மொரு
　　தனிமனிதன் கதை யில்லை,
மங்காத்தூய் "தமிழ் பேசும்-
　　மானிடரின் கதை இதுவாம்!

அ.கௌரிதாசன்
வள்ளுவர் வீதி
ஆலங்கேணி கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

உங்கள் கரம் நான் படைத்தனித்திருக்கின்ற 'தங்கத்துரைக்காவியம்' எனும் இந்நூல் எனது இருபதாவது (20) நூலாகவும் எனது காவிய நூல்களில் ஐந்தாவது காவியநூலாகவும் வெளிவந்துள்ளது. ஏற்கனவே

- நாயகக்காவியம் (கிழக்குமாகாணசாகித்திய விருது பெற்றது)
- அஸ்ர.்.ப் அமரகாவியம்
- வாப்பு மரைக்கார் வழிக்காவியம்
- ஊர்துறந்த காவியம்

ஆகிய நான்கு காவிய நூல்களை வெளியிட்ட நான் தற்போது "தங்கத்துரைக்காவியம்" எனும் இந் நூலை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 2013ம் ஆண்டு எனது தந்தையார் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளைத் தொகுத்தெடுத்து "கவிஞர் மூதூர்எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்" என்ற ஓர்கவிதை நூலை வெளியிட்டேன். அந்நூலை யாருக்குச்சமர்ப்பணம் செய்வதெனச் சிந்தித்தபோது, என் தந்தையின் நண்பரும் என் உயர்ச்சியை உள்ளத்தால் உவந்து நின்றவருமான மாமனிதர் அமரர் அ.தங்கத்துரை (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களுக்கே சமர்ப்பணம் செய்தல் மிகமிகப்பொருத்தமாக அமையும் எனத் தீர்மானித்து அன்னவருக்கே அந்நூலைச் சமர்ப்பணம் செய்தேன்.

தற்போது மற்றுமோர் முயற்சியாக அந்தமாமனிதரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை "தங்கத்துரைக்காவியம்" என்ற ஓர்சிறு காப்பிய நூலாக வெளியிடுவதில் பெரிதும் உவகையுறுகின்றேன்.

உன்னத மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் நூலுருப்பெறும் போது, அதைப் படிக்கின்ற இளம் தலைமுறையினர்கள், தாங்களும் அத்தகைய உன்னத மனிதர்களின் நெறியில் நடக்கவும், செயற்படவும் தூண்டப்படுவார்கள். என்ற உயரிய நம்பிக்கை எனக்குண்டு. அமரர் அ. தங்கத்துரை அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவருடன் மிக நெருக்கமாகப் பழகக் கிடைத்தமையை எனக்குக் கிடைத்த ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். எனது வீட்டிற்கு அவர் பலதடவைகள் வந்து போனமையையும் இன்று மீட்டுப்பார்த்துச் சந்தோசமுறுகின்றேன். கடந்த 1995ம் ஆண்டு காலப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொழும்பு திம்பிரிகஸ்ஸ" பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக்காரியாலயம் அமைந்திருந்த போது அங்கு பல தடவைகள் தன்னுடன் கூடவே என்னையும் அழைத்துச் சென்று, அன்றைய பொழுதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்த அமரர் சிவசிதம்பரம் அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்தி மிகவும் நெருக்கமாக அவருடன் பழகச் செய்தமையையும் மீட்டுப்பார்த்து மகிழ்வுறுகின்றேன்.

கடந்த 1994ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றிணைந்து போட்டியிட்ட போது அவ்வேட்பாளர் குழுவிற்கு தலைமை வேட்பாளராக நானே மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ர∴ப் அவர்களால் நியமிக்கப்பட்டிருந்தேன்.

அத்தேர்தல் காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளராக திரு. இரா சம்பந்தன் (பாராளுமன்ற உறுப்பினர்) எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை வேட்பாளராக மர்கூம் எம்.ஈ.எச் ம∴றூப் (முன்னாள் கப்பல்துறை இராஜாங்க அமைச்சர்) அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். அன்றைய 1994ம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நியமனப்பத்திரத்தாக்கல் தினத்தின் இறுதி நாள் அன்று நான் திருகோணமலை கச்சேரி உதவித்தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்குச் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு ஏற்கனவே வந்திருந்த அமரர் தங்கத்துரை அவர்கள் என்னைக் கண்டதும் எனது தோளில் தட்டிவிட்டு தம்பி அனஸ் உனக்குச் சிறிய வயதில் (அப்போது எனக்கு28 வயது) பெரியதோர் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளாய் பாராளுமன்ற தேர்தல் கட்சி வேட்பாளர் குழுவிற்கே தலைமை தாங்கும் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளாய் மிகவும் சந்தோசப்படுகின்றேன். எனக்குக்கூட அத்தகைய ஓர் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

எனது தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் குழுவிற்கு இரா சம்பந்தன் அவர்களே தலைமை வேட்பாளராக உள்ளார் என்று கூறினார். உண்மையாகவே அந்த மாமனிதன் அமரர் அ. தங்கத்துரை அவர்கள் நான் அரசியலில் வளரவேண்டும் என்று உள்ளத்தால் உவந்தார். ஆனால் அவரின் நாட்டம் நிறைவேறவில்லை. எனது எதிரிகளின் வஞ்சகமும் சூழ்ச்சியும் என் அரசியல் உயர்ச்சியை முடக்கிவிட்டனவோ! அல்லது இறைவனின் நாட்டமோ! மூதூர்க்கு ஓர்உன்னத தலைமை வரக்கூடாது என்று இறைவன் விரும்பினானோ! அல்லது, கொடியோரின் துப்பாக்கிக்குண்டுகளில் இருந்து என் உயிரைப் பாதுகாக்க வேண்டுமென்று அவ் இறைவன் நாடினானோ! யாரறிவார்?

எல்லாமும் என் நலனுக்கே என்ற திருப்தியில் இன்றும் நான் இருந்து கொண்டிருக்கிறேன். இதுவரை இருபது நூல்களை வெளியிட்டுள்ள நான் இன்னும் நூறு நூல்களாவது வெளியிட வேண்டுமென்ற வாஞ்சையில் இருந்து கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் எழுத்துப்பணிகள் மூலம் மானிடம் ஒரு சிறிதளவாவது பயனுறுமாயின் எனக்குக்கிடைத்த வெற்றியென்று பெருமையுறுவேன்.

ஓர் உயரிய தலைவனுக்குக் காவியம் படைத்துவிட்ட மகிழ்வில் என் மனம் திளைத்துக் கொண்டிருக்கிறது. திருகோணமலை மாவட்டத்தில் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்னும் தமிழ் மக்களிடையே தகுந்த தலைமைத்துவத் தேடல்கள் பற்றிய விடயம் பேசப்படுகின்ற பொழுதெல்லாம் ஆங்கே, அமரர் அ.தங்கத்துரை அவர்களின் நாமம் ஓங்கி ஒலிக்கப்படும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

நன்றி

**பெரியபாலம்**
**மூதூர் - 01**
**தொடர்பு - 0776288299**

**எம்.எம்.ஏ.அனஸ்**
20.09.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அ.தங்கத்துரை

## அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

அமரர்.அ.தங்கத்துரை அவர்கள் அருணாசலம் யோகம்மா தம்பதியினருக்கு மகனாக 1936ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதி மூதூர் பிரதேசத்தில் அமைந்துள்ள கிளிவெட்டி எனும் ஊரில் பிறந்தார். இவரின் தந்தையார் அருணாசலம் அவர்கள் விவசாயத்தையே தன்னுடைய தொழிலாகக் கொண்டிருந்தார். அத்துடன் கிளிவெட்டிப் பகுதியின் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவாளராகவும திகழ்ந்தார். அமரர் தங்கத்துரை அவர்களுக்கு பாக்கியதுரை, முத்துக்குமாரப் பிள்ளை, குமாரதுரை ஆகிய மூன்று உடன் பிறந்த சகோதரர்கள் உண்டு.

தங்கத்துரை அவர்கள் தமது ஆரம்பக் கல்வியைத் தமது கிளிவெட்டி மகா வித்தியாலயத்திலேயே கற்றார். 5ம் வகுப்பு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த அவர் மேற்படிப்பை மட்டக்களப்பு வந்தாறு மூலை மகாவித்தியாலயத்தில் கற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் உயர் கல்வியை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியில் கற்றார்.

பின்னர் எழுதுவினைஞர் சேவையில் இணைந்து கொண்டார். நீர்பாசனத் திணைக்களத்தின் சோமபுரம், இரத்தினபுரி, கொழும்பு ஆகிய அலுவலகங்களில் தம் கடமையைத் திறம்படச் செய்து சிறப்புற்றார்.

1964ம் ஆண்டு திருகோணமலைச் சேர்ந்த சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதியினரின் மகள் சத்தியேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்து இல்வாழ்வில் திளைத்தார்.

இல் வாழ்வின் இன்னருஞ் செல்வங்களாக அவருக்கு புஸ்பாஞ்சலி, தர்மினி, சுமதி ஆகிய முன்று பெண்மக்களும் அகிலன் என்ற ஓர் மைந்தனும் உள்ளனர்.

அண்ணன் தங்கத்துரை அவர்கள் அரச சேவையில் கடமையாற்றிய காலகட்டத்தில் இடதுசாரிக் கொள்கையால் கவரப்பட்டார் இதனால் பல தொழில் சங்கங்களுடன் இணைந்து தொழிலாளர் சமூகத்தின் நலனுக்காகப் பாடுபட்டார்.

இதன் பின்னர் தந்தை செல்வநாயகத்தின் சமஸ்டிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டார். இவரின் உன்னத நோக்கும் உயரிய செயற்பாடும் கட்சித் தலைவர்களிடத்தே இவர்மேல் உயரிய நல்லபிப்பிராயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது. இதன் காரணமாகக் கட்சியின் முக்கிய பதவியான இளைஞர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர்த் தொகுதியில் 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தம்ழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டுப் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அன்றைய பாராளுமன்றத்தில் வயதில் மிகவும் குறைந்தவராக (34வயது) இவரே திகழ்ந்தார். 1977ம் ஆண்டுவரை மூதூர் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்து மக்களுக்கு மா பெரும் சேவையாற்றினார்.

1977ம் ஆண்டுப் பாராளு மன்றத் தேர்தலின் பொழுது மூதூர்த் தொகுதி இரு தொகுதிகளாக(சேருநுவர, மூதூர்) என பிரிக்கப்பட்ட போது சேருநுவர சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகவும் மூதூர்த் தொகுதி முஸ்லிம் மக்களைப் பெரும் பான்மையாகவும் கொண்டிருந்த மையினால் அமரர் தங்கத்துரையவர்கள் மூதூர்த் தொகுதியில் 1977ல் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் மூதூரைச்சேர்ந்த மர்கூம் எஸ். எம். மக்கீன்(ஆசிரியர்) என்பவரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக நியமித்தார்.

அத்தேர்தலில் ஐக்கிய தேசியகட்சி சார்பில் போட்டியிட்ட மர்கூம் எம்.ஈ.எச்.ம.ஃ.றூப் என்பவரே வெற்றியீட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்பு 1979ம் ஆண்டு காலப்பகுதியில் கிளிவெட்டி பிரதேசத்தில் ஏற்பட்ட வன்செயல் காரணமாகக் கிளிவெட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயவளவில் நின்ற பெரும் அரசமரமொன்று வேரோடு வெட்டி அழிக்கப்பட்டது.

இந்நிகழ்வின் சூத்திரதாரி தங்கத்துரை அவரேதான் என இன வாதிகள் குற்றஞ்சாட்டினர். இதனால் அவர் கைதுசெய்யப்பட்டு 9 மாதங்கள் சிறையில் வாடினார். குற்றம் நிரூபிக்கப்படாமை காரணமாக விடுதலை செய்யப்பட்டார். இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட ஒரு மாத காலத்தின் பின் மீண்டும் கைதுசெய்யப்பட்டு திருகோணமலை பிரேடரிக் கோட்டையில் அமைந்துள்ள இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டார். அதிலும் அவரின் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமையினால் மீண்டும் விடுதலையானார்.

இதன் பின்பு 1982ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்திற்கான மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவரானார். எனினும் 1983ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசியல் திருத்த மொன்றின் பிரகாரம் இலங்கையர் யாவரும் தமிழீழக் கொள்கையை கைவிட்டு ஐக்கிய இலங்கை என்பதை ஏற்றுக்கொண்டு மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்து தாம் வகிக்கும் பதவிகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனப் பணிக்கப்பட்டார்கள். ஆனால் அமரர் தங்கத்துரை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழக் கொள்கையை கைவிட மறுத்துத் தனது மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் பதவியைத் துறந்தார்.

அதே நேரத்தில் 1979 தொடக்கம் 1980ம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு சட்டக் கல்லூாயில் கற்று சட்டத்தரணியாக வெளியேறினார். இவர் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போதும் தமிழீழக் கொள்கையை கைவிடவிரும்பாததால் சட்டத்தொழிலை அவர் புரியவில்லை.

1985ம் ஆண்டு கலவரத்தைத் தொடர்ந்து அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது அவர் தன் குடும்பத்தாரோடு இந்தியாவுக்குச் சென்றார். அங்கு அவர் தமிழ்நாட்டிற்கு இலங்கையில் இருந்து வந்த மக்களின் நலன்களுக்கான பணிகளில் ஈடுபட்டார். சில வருடங்களின் பின்னர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பி கட்சிப்பணிகளிகளில் ஈடுபட்டார்.

பின்னர் 1994ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டுப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இக்காலப் பிரிவில் இவர் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு மகத்தான மாபெரும் பணிகளை ஆற்றினார். சொந்த இடங்களைத் துறந்து அகதிமுகாம்களில் வாழ்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல், வேலையற்ற தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல். குறிப்பாக அன்று துறைமுகங்கள் கப்பல்துறை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத்தலைவர் மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களுடன் அணுகி இலங்கை துறைமுக அதிகாரசபையில் நிறைய நியமனங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

அதேபோல் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நிதிகளினூடே பள்ளிக்கூடங்கள் பாதைகள் பாலங்கள், மின்னிணைப்பு, வைத்தியசாலைகள் எனப் பல்வேறுபட்ட பணிகளையும் இவர் செய்தார்.

மேலும் திருகோணமலை மிகுந்தபுர தொழினுட்பக் கல்லூரி நிர்மாணம், நிலாவெளிப் பிரதேசத்தில் அமைந்த பல்கலைக்கழக வளாகம், திருமலை கணேசபுர வீடமைப்புத்திட்டம் யாவும் அமரர்.அ. தங்கத்துரை அவர்களின் சேவைகளுக்குச் சான்றாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. மேலும் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டார்.

மூதூர் பள்ளிக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள “தங்கபுரம்” கிராமமும் சேருநுவர அலிருழவையை அண்மித்த “தங்கநகர்” கிராமமும் அமரர் தங்கத்துரை அவர்களின் அடையாளச் சின்னங்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதே போல் இவரின் உடன் பிறந்த தம்பி குமாரதுரை அவரின் பெயரில் உள்ள குமாரபுரம் பகுதியும் தங்கத்துரை அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிமையைச் செப்பி நிற்கின்றன. அதேபோல் இந்தியாவின் அண்ணா நகர் ஏசியாட் கொலனியில் அமைந்துள்ள தங்கத்துரை அரங்கமும், தங்கத்துரை பூங்காவும் அவரின் புகழைப் புவியெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இத்தகு மகிமை மிகு மாமனிதர் அ.தங்கத்துரை அவர்கள் 1997.07. 05ம்திகதி திருகோணமலை ஸ்ரீசண்முகா மகளிர் கல்லூாயில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக்கட்டிடத் திறப்பு விழாவை முடித்து வெளிறேும் போது இரவு 7மணியளவில் மனிதம் மரித்துப்போன கூலிக்கமர்ந்த கொலையாளிகளின் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகித் தன்னுயிர் துறந்தார். இவருடன் சேர்த்து அந்தக் குண்டுத்தாக்குதலில் கா. ஜீவரெட்ணம்(ஆசிரியர்) திருமதி. ராஜேஸ்வரி தனபாலசிங்கம்( அதிபர், ஸ்ரீசண்முகா மகளிர் கல்லூரி) திரு.ஜோசப் (அதிபர், நாமகள் வித்தியாலயம், படுக்கை) திரு. கணேசலிங்கம் திரு. இரத்தினராஜா (பொறியியலாளர்) ஆகிய ஐவரும் உயிரிழந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்துரைக்காவியம்

## காப்பு

01. மனிதத்தின் மாண்பெனவே மண்ணுலகில் திகழ்ந்த
மாமனிதர் தங்கத்துரை மாண்பதனை நானும்
இனியதமிழ் மொழியினிலே இலங்குநற் காவியமாய்
இயம்பிடவே எந்தனுக்கு இறையோனே காப்பு

02. தங்கத்துரைக் காவியத்தில் தவறுகள்வந் திடாது
தரமுயர்வாய்த் தானமைந்து தரணியில்சிறந் தோங்க
பங்கமிலா முறையினிலே பார்படைத்தே ஆளும்
பெரியோனாம் இறையோனே பலமான காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைஞ்சல்

03. நல்லதொரு தலைவனென நம்நெஞ்சம் நிலைத்த
நாயகன்தங் கத்துரையை நானும்நற் கவியாய்ச்
சொல்வதற்கு இறையோனே சொல்வளத்தை எனக்குச்
செந்தமிழில் நன்கேதான் சொரிந்திடுவாய் நீயும்

04. மக்களுக்காம் சேவையிலே மகிழ்வதுவே கண்டும்
மண்ணுலகில் தலைமையதை மாண்புறவே செய்தும்
தக்கதொரு சான்றாகத் தலைமைக்குத் திகழ்ந்த
தங்கத்துரை யையான்பாட தயாளனேநன் கருள்வாய்

05. உன்னதமாம் தன்மைக்கு உயரணியாய் ஆன
உத்தமன்தங் கத்துரையை உரைத்திடவே கவியால்
என்னுள்ளம் உணர்ந்திட்ட ஏகனேநீ எனக்கு
ஏராளத் தமிழ்வளத்தை ஏற்றமெனத் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. என் தந்தை கவிமுகைதீன் எழில்நண்பன் ஆன
ஏந்தலர்தங் கத்துரைபற் றிப்பாடவே நானும்
நன்றெனவே நாடிட்டேன் நற்றமிழும் எந்தன்
நாவினிலே நிறைந்திடவே நாயனேநீ அருள்வாய்

07. என்னருமைப் பாட்டன்புல வருமுமர்நெய் னார்க்கு
எழிற்றமிழில் புலமையினை ஏராளம் நீயும்
உன்னருளால் ஈந்ததுபோல் உயரிறையே எனக்கும்
உள்ளத்தில் தமிழ்ப்பெருக்கை ஊற்றெடுக்கச் செய்வாய்

## அவையடக்கம்

08 நாட்டினிலே பேர்பெற்ற நல்லபெரும் தலைவன்
நம்நெஞ்சம் நிறைநாயகன் தங்கத்துரை பற்றிப்
பாட்டறியாச் சிறுகவியான் பாடிடவே துணிந்தமை
பைத்தியத்துப் பணியொன்று பகராதோ புவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கம்பனுடன் புலவருமா் காவியமே பாடும்
காத்திரமாம் பணிதனுக்குக் காசினியில் பிறந்தோா்
இம்மியளவு தமிழறிந்த இவன்அனசும் காவியம்
ஈங்குரைத்தல் வேடிக்கை இயம்பிடுமே பதியும்

## நகர் வாழ்த்து

10 மாவலியின் நீரபாய்ந்து மண்வளவும் மிகைத்து
மாபெரிய செழுமையிலே மண்ணுலகில் மிளிரும்
நாவலா்கள் நிறைந்தபதி கிளிவெட்டி தன்னை
நாட்டினிலே நிறைசெல்வ நற்பதியே என்போம்.

11 செந்நெல்லும் மாபலாவும் செழுமையுடன் வள்ர்ந்து
செல்வத்தின் களஞ்சியமாய்ச் சிறப்புற்றுத் திகழும்
வந்தனங்கள் பெற்றபதி வளக்கிளிவெட் டியென
வாஞ்சையுடன் நாமும்நல் வாழ்த்துரைப்போம் நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 பார்க்கின்ற இடமெல்லாம் பரந்தவெளிக் களனி
பயிரினது பசுமையதே பதியெங்கும் மிளிரும்
ஓர் குறையும் இல்லாத உன்னதமாம் ஊராய்
உரைப்போமே கிளிவெட்டி உயர்ஊரை நாமும்

## காவியம்

13 அருணாசலம் யோகம்மா அருந்தவப்புதல் வனென
ஆயிரத்துத் தொழாயிரத்து அமைமுப்பத் தாறில்
பெருமைமிகு தைமாதத்தின் பதினேழாம் திகதி
பதிகிளிவெட் டிமண்ணதனில் தங்கத்துரை பிறந்தார்

14 தன்பதியாம் கிளிவெட்டி தனிலவர்ஆ ரம்பத்
தகுகல்வி கற்றேதான் தக்கபடி தேர்ந்தார்
உன்னதமாம் ஐந்தாந்தர உயர்புலமைப் பரீட்சை
உயர்வாய்த்தே றியுயர்ந்திட் டார்தானே முளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வந்தாறு மூலையுடன் வளமிகுயாழ் ஸ்ரான்லி
வாய்த்தநற்கல் லூரிகளில் வாஞ்சையுடன் கற்றே
உந்திட்ட தன்னுடைய உயர்கல்வித் தாகம்
உவப்புடனே தீர்த்திட்டார் உணர்வோமே நாமும்

16 எழுதுவினைஞர் பதவியெனும் ஏற்றமிகு தொழிலை
ஏற்றவரும் பலகாலம் ஏற்றபணி செய்தார்
உழுதுண்டு வாழ்கின்ற உழவர்க்கு உதவும்
உரியநீர்ப்பா சனத்திணைக்களத் துப்பணிதான் அதுவே

17 இரத்தினபுரி சேமபுரம் இவற்றோடு கொழும்பு
இங்கெல்லாம் தன் பணியை இதமாகச் செய்தார்
பரந்தநல்ல சிந்தையுடன் பணிதன்னைச் சிறப்பாய்ப்
புரிந்திட்ட இவர்மகிமை புரிவோமே நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 அலுவலகப் பணிதனுக்குள் அடங்கியவர் இருத்தல்
அவருக்கோ போதாதே அகன்றபணி வேண்டும்
சிலகாலம் கடந்தவரும் சிறப்பான பணிக்கு
சிறந்தஇடம் அரசியல்எனச் சிந்தையிலே கொண்டார்

19 தங்கத்துரை அரசியலைத் தாரணியில் நன்கு
தெரிந்திட்ட மாந்தர்களில் தகுஇடத்தில் நானும்
தங்கித்தான் உள்ளதனால் தெளிவாக அவரின்
தன்மைகளைச் செப்புதற்குத் தகுதிஎனக் குண்டே!

20 தொழிலாளர் நலனுக்காய் தகுபணிகள் ஆற்ற
தாம்முயன்று இடதுசாரித் தொழிற்சங்கங் களுடன்
அழகுடனே இணைந்தன்று அரும்பணிகள் செய்தார்
அவர்நோக்கு அத்தனையும் அதிசிறப்பே அறிவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 சத்தியேஸ்வரி என்கின்ற சிறப்புமிகு மங்கையை
சங்கையென இல்லறத்தின் சங்கமமாய் ஏற்றார்
இத்தரையில் மகள்மூவர் இனியமகன் அகிலன்
இன்னரிய பேறாக இவரிங்கே பெற்றார்

22 பேச்சாற்றலில் தனிச்சிறப்புப் பெற்றவரும் திகழ்ந்தார்
பேணுதலே தன்செயலின் பெருமையெனக் கொண்டார்
ஆச்சரியம் என்றேதான் அனைவரையும் கவர்ந்தார்
அதனாலே மக்களது அன்பதனைப் பெற்றார்

23 தந்தையராம் செல்வாவின் தமிழரசுக் கட்சி
தந்தபெரும் கொள்கையிலே தானும் உடன்பட்டு
அந்தக்கட் சிதனிலவரும் ஆர்வமுடன் இணைந்தார்
அங்குமவர் தன்னுடைய அரும்பணியால் உயர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 தமிழரசுக் கட்சியதன் தனிஇளைஞர் அணியின்
தலைமைதனை ஏற்றவரும் தந்திட்ட சேவை
தமிழர்தம் விடிவுக்குத் தனிப்பாதை என்றே
தழைத்தோங்கி நின்றதையும் தெரிந்திட்டோம் நாமும்

25 எம்பிஎன ஆகிட்டார் எழுபதினில்(1970) அன்று
ஏற்றபெரும் பதவியதால் ஏராளம் சேவை
தம்தொகுதி மூதூர்க்குத் தந்திட்டார் தரமாய்
திகைத்திட்டார் இவர்பணியால் தினமும்ஊர் மக்கள்

26 எழுபதுமுதல் எழுபத்தே ழெனஏழாண் டுகள் வரை
ஏற்றமிகு எம்பிஎன எமக்கிருந்தவர் செய்த
முழுதான சேவைகளை மொழிந்திடலோ கடினம்
மாபெரிய சேவகனாய் மிளிர்ந்திட்டார் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 இரட்டையங்கத் தொகுதியாய் இருந்திட்ட மூதூர்
இப்போதுள் (1974) அங்கத்தவர் இருந்திடுதொ குதியாய்
உருவாக்கம் பெற்றிடவே உயர்தொகையாய் முஸ்லிம்
ஊர்என்றே அதுவாக ஓதுங்கும்நிலை பெற்றார்

28 கிளிவெட்டிக் கோயில்தனில் குடிகொண்டு நின்ற
கிளைத்தபெரும் அரசமரம் காணாமல் ஆக
அளித்ததுவே தண்டனையை அண்ணனுக்கு அரசும்
அவரொன்பது மாதங்கள் அல்லலுற்றார் சிறையில்

29 குற்றமது நிருபிக்கக் கூடியதாய்ச் சான்று
காணாத காரணமாய் கிட்டியதே விடுதலை
பற்றுடனே இனநலனைப் பார்த்திட்ட தலைவன்
பட்டிட்ட துன்பமதோ பகன்றிடவும் ஒண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 விடுதலையே பெற்றவரும் வெளிவந்த பின்னே
வஞ்சகமாய் மீண்டுமவர் வாடிட்டார் கைதால்
கொடுமைமிகு சித்திரவதைக் காளாகிப் போயும்
குற்றத்து ஓப்புதலை கொடுக்கவில்லை அவரும்

31 ஆயிரத்துத் தொழாயிரத்தின் அமைஎண்பத் தொன்றில்
அமைந்தமாவட் டசபைத்தேர் தலில்அவரும் வென்று
தூயதொரு தலைமையதன் திருவுருவும் ஆகி
துடிப்பான சேவைகளால் துலங்கிட்டார் புகழில்

32 தங்கத்துரை யவரைநன்கு தரமாய்அறிந் தோரில்
தக்கதொரு இடத்தினிலே திகழ்கின்றேன் நானும்
எங்குமவர் புகழதனை எடுத்துரைக்கும் தகுதி
எனக்குண்டு என்பதனை ஏற்பீரே நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33 என்னருமைத் தந்தையவர் எழில்நண்பர் என்றே
ஏந்தலராம் தங்கத்துரை என்றன்று திகழ்ந்தார்
அன்னவரின் ஆற்றலினை அழகுறவே தந்தை
அறைந்ததனால் அவர்பற்றி அறிவேன்நான் அதிகம்

34 அரசியலில் நானுமன்று அஷ்ர.்.பவர் காலம்
அதிகளவு ஈடுபட்டேன் அண்ணனுடன் இதனால்
பெருமளவு நெருக்கமுடன் பழகிட்டேன் அதனால்
பகர்வதற்க்கு அவர்பற்றி பெரும்சுலபம் எனக்கே

35 அரசியலில் அன்றெனக்கு அரும்பலமாய் ஆனார்
அறிவுரைகள் பலகூறி அனஸ்என்னை வளர்த்தார்
பெருமனதே கொண்டிட்ட பெருந்தகையாம் இவரை
பாவாகப் பாடுவதில் பெருமைதான் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36 அரசாங்கம் ஐக்கியத்து இலங்கையெனும் புதிய
ஆணைதனைக் கொணர்ந்திடவே அதற்கான சத்தியம்
தரமறுத்து உறுதியுடன் தானவரும் நின்றார்
தக்கபெரும் மாவட்ட சபைப்பதவியும் துறந்தார்

37 சட்டமது கற்றவரும் சட்டத்தர ணியெனச்
சரித்திரத்தில் பின்னவரும் சாதனையே படைத்தார்
சட்டத்தொழில் சத்தியப்பிர மாணம்கா ரணமாய்
செய்யவில்லை அவரும்எனச் செப்பிடுவோம் நாமும்

38 உயிருக்கு அச்சுறுத்தல் உருவாகி நிற்க
உண்டான கலவரத்து எண்பத்தைந் (1985) தினிலே
பயணமென இந்தியா போயிட்டார் அவரும்
பணியென்றங் ககதிகள்நலன் பேணிட்டார் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39 பின்னவரும் இலங்கைக்கு பிரியமுடன் மீண்டு
பணிசெய்து மக்கள்நலம் பேணியே நடந்தார்
நன்றாகக் கட்சிநலன் நாடியுமே காத்தார்
நலிவுற்ற மக்களுக்கு நற்றுணையும்ஆனார்

40 புலர்ஆயிரத் தொழாயிரத்தித் தொண்ணூற்றி நான்கில்
பாராளு மன்றத்துப் பொதுத்தேர்தல் தன்னில்
பலமாகத் திருமலையில் பெருவெற்றி கண்டார்
பாரியதாம் சேவைசெய்யும் பெரும்வாய்ப்பைப் பெற்றார்

41 தலைமையின்றிப் பல்லாண்டு திருமலையில் மக்கள்
தவித்திட்ட நிலைமாறி தகுதலைமை கிடைத்த
நிலைதன்னால் அம்மக்கள் நல்மகிழ்வு கொண்டார்
நாட்டமுடன் அண்ணனுமே நற்சேவை புரிந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42 தொழிலின்றி திகழ்ந்திட்ட தமிழ்இளைஞர் யுவதிகள்
தக்கதொரு தொழில்பெறவே தங்கத்துரை இவரும்
வழியமைத்துக் கொடுத்திட்ட வரலாறும் அறிவோம்
வளவாழ்வு இவர்கள்பெற வழியவரும் ஆனார்

43 துறைமுகத்து அமைச்சரென துலங்கிட்ட அஷ்ரஃபின்
துணையாலே தொகையாகத் துறைமுகத்தில் வேலை
முறையாக வழங்கியதை மறந்திடவும் முடியா
மாகாண சபைதனிலும் மிகையாத்தொழில் கொடுத்தார்

44 அகதிமுகாம் வாழ்வதனில் அல்லலுற்ற மக்கள்
அண்ணனிவர் தலைமையினால் அகமகிழ்வே உற்றார்
உகந்தபல புனர்வாழ்வு உயர்திட்டம் வகுத்து
உன்னதமாய்ச் செய்ததனை உளமுவந்தே புகழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45 புனர்வாழ்வு அமைச்சரெனும் பதவிதனை வகித்த
பெருந்தலைவர் அஷ்ரஃப்எனும் பெருந்தகையின் ஊடாய்
கனமாகச் சேவைகளைக் காத்திரமாய்ச் செய்து
கண்டிட்டார் தங்கத்துரை கீர்த்திதனை அதிகம்

46 சேவைக்கு அண்ணன்எனச் சொல்லும்நிலை தனுக்குச்
சிறப்பாக உயர்ந்திட்ட செம்மல்இவர் என்போம்
பூவைநிகர் புனிதரெனப் புகழுரையும் சொல்வோம்
பூவுலகில் தமிழினத்தின் பொக்கிசமும் என்போம்

47 தொழிலின்றி வாடிட்ட தமிழ்இளைஞர் கட்கு
தொகையாகத் தொழில்கொடுத்துத் தகுபுகழைஅடைந்தார்
அழியாத அதிசயத்து அரும்பணிகள் பலவும்
அவராற்றி மக்களிடை அழியாஇடம் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48 தங்கத்துரை எனுமிவரோ தரத்தினிலே நல்ல
தங்கத்தின் நிகராகத் தான்திகழ்ந்தார் என்போம்
பங்கமிலா முறையினிலே பண்புநெறி வாழ்ந்த
பெருமாந்தன் இவரென்று புரிவோமே நாமும்

49 கொடுமைதனைக் கொடுமையெனக் குறித்துரைக்கும் தன்மை
கூடுதலாய் இவரிடத்தே குடியிருக்கக் கண்டோம்
அடங்கிடவும் மாட்டாரே அதிகாரம் தனுக்கு
அன்பிற்கே அடிபணிவார் அவர்பண்பு ஈதே!

50 உன்னதமாம் தன்மைகளை உறுதியுடன் பற்றி
உலகத்தில் வாழ்ந்திட்ட உயர்தலைவர் என்போம்
நன்றான நெறிமுறைகள் நன்முறையில் காத்த
நாயகராம் இவர்புகழோ நானிலத்தில் மிகைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51 இளையோரைத் தம்பியென இவரழைக்கும் பாணி
இன்பத்தை இதயத்தில் ஈந்திடுமே என்றும்
விளைநிலமாய் விடுதலைக்கு விளங்கிட்ட இவரோ
வையகத்தில் தலைமைகளில் வியப்பேதான் என்போம்

52 கிராமப் பகுதியெலாம் கீர்த்திபெற அவரும்
கனசேவை செய்ததனைக் காண்கின்றோம் நாமும்
வாராதோ அவர்தலைமை வகையதுபோல் என்று
வாஞ்சையுடன் மக்களெலாம் விளங்குவதும் புரிவோம்

53 சிறுதேவை என்றாலும் சிரத்தையவர் கொண்டு
சீக்கிரமாய் அதைமுடிக்கும் சிறப்பதுவே கொண்டார்
குறுகியதாம் எண்ணத்தைக் குழிதோண்டிப் புதைத்து
கூடியதாம் பார்வையுடன் குவலயத்தில் மிளிர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54 நாட்டினிலே தமிழ் முஸ்லிம் நல்லுறவு ஓங்க
நாட்டமுடன் நல்முறையில் நாளுமவர் முயன்றார்
காட்டியுமே தான்நின்றார் காத்திரஅவ் உறவை
காலமுமே அவர் செயற்குக் கடுஞ்சான்றாய் ஆகும்

55 அரசியலின் ஞானத்து அமைவிடமும் ஆனார்
அபாரமிகு ஆற்றலதும் அணிகலனே அவர்க்கு
பரந்தபெரும் நோக்குடைய பார்வையதும் பெற்ற
பெருமகனாய் இவரைநாம் புரிந்திடுவோம் நன்கு

56 அரசியலால் தங்களையே அணிசெய்யும் தலைமைகள்
அதிகமென நிறைந்திட்ட அவனியிலே அவரோ
அரசியலைத் தலைமையினால் அணிசெய்தே நின்றார்
அறைவோமே இச்சேதி அனைவருமே அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57 சிங்களமொழி தனிலும்நற் சிறப்பான தேர்ச்சி
சொந்தமெனக் கொண்டவரும் சிறப்புற்றுத் திகழ்ந்தார்
பங்கமிலா முறையினிலே பாசையாங்கிலத் தினிலும்
பாங்குடனே பேசுகின்ற பெருமையதும் கொண்டார்

58 தம்பியென இளையோரைத் தானழைக்கும் வகையோ
தாரணியில் வியப்பேதான் தாழ்பணிவர் இளையோர்
நம்பிக்கை பெற்றிளையோர் நல்லுயர்வு காண
நல்லநெறி காட்டியவர் நல்மகிழ்வே கண்டார்

59 அண்ணன்என என்தலைவர் அஷ்ர.்.புமே இவரை
அன்புடனே அன்றழைத்து அகமுவந்து கதைக்கும்
எண்ணமெலாம் எந்தனுக்கு ஏராளம் இன்று
ஏற்றமிகு நினைவாக எழிலாய்வரு கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 தம்பியென அஷ்ர.்.பினை தங்கத்துரை இவரும்
தீராத வாஞ்ஞையுடன் தான்அழைத்த நினைவும்
எம்மனதில் நீங்காது என்றும்தான் நிலைக்கும்
எண்ணுகையில் இவ்வுறவை எளிலேதான் எனக்கு

61 அண்ணாத்துரை தனைமக்கள் அண்ணாவென அழைத்த
அன்புமிகு செயலேபோல் அண்ணன்என இவரை
மண்மீதில் மக்களுமே மாண்புடனே அழைக்கும்
மகிமைதனை மொழிகையிலே மகிழ்வேதான் எமக்கு

62 அன்றையதாம் எந்தனது அரசியலின் போதில்
ஆனதொரு துணையாக அவர்எனக்கு ஆனார்
உன்னதமாம் உபதேசம் உரியபடி எனக்கு
உளமுவந்து செய்திட்டார் உத்தமனார் இவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63 என்னருமைத் தந்தைகவி எஸ். எல். எம். முகைதீன்
ஏற்றமிகு நண்பர்என என்றுமிவர் இருந்தார்
அன்னதனால் என்னுடனும் அளவில்லாப் பற்று
அண்ணன்இவர் கொண்டிருந்தார் அறிந்திடுவீர் நன்கு

64 உன்னதமாம் தலைவனுக்கு உளமுவந்து நானும்
உயரியதாம் சன்மானம் உவந்தளிக்கத் துணிந்தேன்
நன்றாம்இக் காவியத்தை நாட்டமுடன் யாத்து
நாட்டினிலே அவர்நாமம் நிலைத்திடவே செய்தேன்

65 தன்னினத்தின் உயர்வேதான் தன்னுயர்வு என்று
தான்என்ணி வாழ்ந்திட்ட தகுதலைவர் இவரின்
உன்னதத்தை உலகென்றும் உயர்வாகப் போற்றும்
உலகினிலே கோடியிலே ஒருவரிவர் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66 திறமைக்குச் சான்றாகத் திகழ்ந்திட்ட இவரை
தமிழினமும் தன்னுடைய தனிப்பேறாய்ப் போற்றும்
நெறிதவறா நிலையினிலே நிலத்தினிலே வாழ்ந்த
நற்றலைவர் இவர்மகிமை நானிலத்தே அழியா!

67 அரசியலின் ஞானத்தில் அதிஉச்சம் திகழ்ந்த
அண்ணனிவர் அருந்திறமை அத்தனையும் உலகில்
வரலாறாய் ஆகியது வாழ்ந்திடுமே நிலைத்து
வையகத்தில் இவர்புகழும் வீழாதே என்றும்

68 தமிழர்தம் விடிவுக்கு தயாளன்இறை தந்த
தனித்தபெரும் பேறென்றே தங்கத்துரை ஆனார்
அமிர்தம்என அன்னவரை அனைவருமே உவக்கும்
அருமைநிலை தனக்கேதான் அவரிங்கே உயர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69 கிளிவெட்டி மண்ணினது கீர்த்தியென மிளிர்ந்தார்
கனபெருமை ஊர்காணக் காரணமும் ஆனார்
அளித்திட்ட வாக்குறுதி அத்தனையும் காத்தே
அழியாத புகழுக்கு அருகதையாய் ஆனார்

70 தன்னுயிரை உரமாக்கித் தன்னினத்தைக் காத்த
தங்கத்துரை எனும்தானைத் தலைவரிவர் புவியில்
உன்னதமே பெற்றிட்ட உயர்மனிதர் என்று
உலகறிய உரைப்பதிலே உவகையே காண்போம்

71 சேவைகளே செய்கின்ற சிறந்தபெரும் நோக்கு
சிந்தையெல்லாம் நிறைந்தவரும் சிறப்பாகத் திகழ்ந்தார்
ஆவலுடன் மக்களுக்கு அவரென்றும் தம்மால்
ஆனபணி அத்தனையும் அழகுடனே செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72 மற்றோரின் கருத்ததனை மதிக்கின்ற தன்மை
மேன்மையென இவரிடத்தே மிளிர்ந்ததையும் அறிவோம்
பற்றுடனே மக்கள்பணி புரிந்தேதான் மகிழ்ந்தார்
பரந்தபெரும் நோக்குடனே பக்குவமாய் நடந்தார்

73 நாட்டினது அமைச்சர்கள் நட்பினையும் பெற்று
நல்லபல சேவைகளை நாம்வியக்கச் செய்தார்
காட்டுடனே அண்மித்த கனபகுதி யாவும்
கண்டதனின் குறைகளினைக் காத்திரமாய்த் தீர்த்தார்

74 நாடாளு மன்றத்தில் நிறையப்பேர் தனது
நண்பர்கள் என்றதொரு நல்லுறவைப் பெற்றார்
ஏடெல்லாம் அவரேற்றம் எடுத்தெழுதும் அளவு
ஏற்றபுகழ் அத்தனையும் எழிலாகப் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75 அன்றையதாம் நாடாளும் அரும்மன்றம் தன்னில்
அதிகுறைந்த வயதுடையோன் ஆனோனாய் இவரும்
நன்றெனவே திகழ்ந்ததனை நாடதுவும் போற்றி
நின்றதையும் நாமறிவோம் நிஜமன்றோ! ஈது

76 புன்னகையே பூத்தவராய் பழகிடுவார் என்றும்
புதுவசந்தம் மேவிடுமே பேசிட்டால் அவரும்
உன்னதமாம் கொள்கையிலே உறுதியென நின்ற
உயர்மனிதர் இன்னவரை உளமாறப் புகழ்வோம்

77 இந்தியாவில் அண்ணாநகர் இலங்கேசியாட் கொலனியில்
இருந்திடுநல் தங்கத்துரை அரங்குடன்பூங் காவும்
தந்திடுதே அவர்புகழைத் தகுமுறையில்த் தானே
தாய்நாடு கடந்துமவர் திளைத்திட்டார் புகழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78 மனிதத்தின் மகிமைக்கு மாபெரிய பணிகள்
மாண்புடனே செய்திட்ட மாதலைவன் இவரும்
இனிதான தன்மைகளின் இருப்பிடமாய் இருந்து
இன்னரிய பணிசெய்து இன்பமே கண்டார்

79 பொருள்சேர்க்கும் அரசியலில் பெருந்தகையாம் இவரோ
பணமில்லா நிலைதனில்த்தான் பாருலகு துறந்தார்
வரலாறும் இவர்புகழை விதந்துரைக்கும் நன்கு
விளங்கிடுவோம் நாமுமிவர் வாழ்வதனின் மகிமை

80 தன்னினத்தின் உயர்வுக்காய் தன்னுயிரும் துறந்து
தரமான சேவைகளைத் தந்திட்ட இவரின்
உன்னதத்தை உணர்த்திடுவோம் உயர்வாக நாமும்
உலகினிலே இவர்நாமம் ஓங்கிடுமே நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81 அரசியலின் ஞானத்தில் அருஞ்சிறப்புப் பெற்ற
அருந்தலைவர் இவரென்று அறைவோமே நாமும்
வரலாறும் இவர்பெருமை விதந்துரைக்கக் கண்டோம்
வையத்தில் இவர்மகிமை வாழ்ந்திடுமே நிலைத்து

82 தமிழர்தம் தலைமைகளில் தன்னிகரே அற்ற
தனித்தபெரும் தலைவனெனத் திகழ்ந்திட்ட நல்லோன்
தமக்காக வாழாத தரம்மிக்க தலைவன்
தங்கத்துரை என்றேதான் தினமுரைப்போம் நாமும்

83 ஏழ்மைநிலை மக்களது ஏற்றமென ஆகி
என்றுமவர் அவர்கட்காய் ஏங்கித்தான் நின்றார்
தாழ்மைநிலை தனைவிடுத்துத் தழைத்தோங்க அன்னோர்
தீரமுடன் உழைத்தவரே தங்கத்துரை என்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84 தந்தைசெல்வ நாயகத்தின் தலைமையிலே வளர்ந்த
தலைவர்தான் இவரென்று தெரிந்திடுவோம் நாமும்
விந்தையேதான் இவர்சேவை விளங்கிடுவோம் நன்கு
வையகத்தில் இவர்தலைமை வசந்தத்தின் வரவே

85 தமிழ் முஸ்லிம் உறவுக்குத் தனிப்பாலம் ஆனார்
தமிழர்போல் முஸ்லிம்களை தரமாய்நே சித்தார்
அமிர்தம்என வார்த்தைகளை அருமையாய் உரைப்பார்
அவர்செய்கை அத்தனையும் அழகேதான் என்போம்

86 மாவட்ட மக்களது மனங்களிலே எல்லாம்
மறையாத இடம்தன்னை மாசிறப்பாய்ப் பெற்றார்
ஆவலுடன் அவர்புகழை அறைந்திடுவர் மக்கள்
அவரில்லா நிலையெண்ணி அழுகையிலே திளைப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87 தன்னருமைத் தலைமையினால் தகுமுறையாய்ச் சேவை
திறன்படவே செய்திட்ட தங்கத்துரை இவரை
என்றென்றும் மக்களெல்லாம் எண்ணித்தான் மகிழ்வர்
ஏற்றதொரு தலைமைனெ எளிலேதான் கொள்வர்

88 உன்னதமாம் தலைமையிலே உயர்வுற்றுத் திகழ்ந்து
உத்தமர்தம் உள்ளமதை உறைவிடமாய்க் கொண்டார்
தன்னிகரே இல்லாத தலைவர்தான் என்ற
தனிச்சிறப்பைத் தமிழரிடைத் தனதாக்கிக் கொண்டார்

89 பாலங்களும் பள்ளிகளும் பாதைகளும் இவரின்
பணிகளிலே முக்கியமாய்ப் பரிணமித்துப் போக
வேலைகளும் இளைஞர்க்கு வழங்கியவர் நின்றார்
வரலாற்றில் இவர்சேவை வாழ்ந்நிடுமே நிலைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90 நாட்டில்இனப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வை
நிலைநாட்ட முயன்றிட்டார் நாட்டமுடன் அவரும்
வாட்டுகின்ற கொடுமையெல்லாம் விலகிடுமே இதனால்
வசந்தமது தமிழர்க்கு வந்திடுமே என்றார்

91 கல்வியிலே தன்னினத்தைக் காத்திரமாய் உயர்த்த
கனத்தபல திட்டங்களின் கர்த்தாவாய் ஆனார்
கல்வியதன் வளர்ச்சிக்காய்க் கனநிதிகள் ஒதுக்கி
கனவினிலும் அதன்உயர்வை கண்டிட்டார் அவரும்

92 தன்பகுதி மக்களுக்குத் தரமாகப் பணிகள்
தான்செய்தே மகிழ்ந்திட்ட தலைவரிவர் தானே!
நன்றுடனே பாதைபள்ளி நற்பணிகள் எல்லாம்
நலமாக ஊர்காண நல்வழியாய் ஆனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93 இனவாதி எனஅவரும் இருந்ததுவும் இல்லை
இதமாகப் பிறஇனத்தை இதயத்தால் உவந்தார்
தனக்காக என்றுமேதான் தரணிதனில் வாழாத்
தன்மையிலே திகழ்ந்தவரே தங்கத்துரை என்போம்

94 அடக்கமிகு தன்மைக்கு ஆதாரமும் ஆனார்
அகங்காரம் கொள்ளாத அருங்குணமும் கொண்டார்
திடமான உளஉறுதி தான்கொண்டே திகழ்ந்தார்
தாரணியில் இவர்மகிமை தரத்தினிலோ உயர்வு

95 தன்னுடைய சோதரனாய்த் தான்பிறந்த குமாரத்
துரையவரின் நாமத்தை குமாரபுரம் செப்ப
நன்றெனவே அப்பகுதி நல்லுயர்வு காண
நாட்டமுடன் சேவைகளை நன்கிவரும் செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96 பள்ளிக்குடி இருப்பினிலே பகரும்தங் கபுரம்
பாங்குடனே இவர்பெயரைப் பாரெங்கும் செப்பும்
அள்ளிவழங் கிட்டஇவர் ஆனபெரும் பணிதம்
அடையாளம் இப்பகுதி அறிவோமே நாமும்

97 அரிப்பென்னும் சேருநுவர அமைபகுதி தன்னில்
அழகுடன்மறு தங்கபுரம் அமைந்துளதும் அறிவோம்
வரலாற்றில் அண்ணன்இவர் வளமான பணிதம்
வழங்கியதால் இப்பகுதி விளங்குவதும் புரிவீர்

98 மாற்றினமாம் முஸ்லிம்களும் மெச்சுகின்ற வண்ணம்
மண்மீதில் மிளிர்ந்திட்ட மாமனிதர் இவரின்
ஆற்றலதோ மிகையன்று அறிவோமே நாமும்
அவர்போன்ற தலைவர்கள் அரிதென்றும் சொல்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99 தமிழினத்தின் விடிவதனைத் தினமெண்ணித் திளைத்தார்
தரம்மிக்க சேவைகளைத் திறம்படவே செய்தார்
தமதுயர்வாய்த் தம்மினத்தைத் தானவரும் உவந்தார்
தரணியிலே இவர்போன்ற தலைமையதோ குறைவு

100 இனப்பிரச்சனை நாட்டினிலே இனிதேதான் தீர
இலட்சியமாய் உழைத்திட்ட இன்னரிய தலைவர்
தனதான திறனெல்லாம் தமிழினஉயர் வுக்காய்
தந்திட்ட தலைவர்தான் தங்கத்துரை என்போம்

101 திருமலையில் கணேஸ்லேன்எனுந் தனித்தபெரும் இடத்தில்
தன்னுடைய திறனாலே தனிவீட்டுத் திட்டம்
பெரியதொரு சாதனையாய்ப் புரிந்திட்ட இவரின்
புகழோங்கும் புவியினிலே பெரிதாகத் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102 மக்களது தலைவன்என மிளிர்ந்திட்ட போதும்
மக்களுடன் மக்களாக மிளிர்வதையே உவர்ந்தார்
தக்கதெரு தலைவனுக்குத் தன்மக்கள் தானே
தலையாய காப்பென்று தான்கருதி நடந்தார்

103 எண்ணமெல்லாம் இனத்தினது ஏற்றமென வாழ்ந்த
ஏந்தலராம் இன்னவரை எல்லோரும் உவப்பர்
அண்ணன்டிஜனும் அடைமொழியை அணிகலனாய்க் கொண்ட
அவர்புகழோ அழியாது அகிலத்தில் என்றும்

104 உள்ளத்தின் உறுதியிலே உயர்ந்தென்றும் நின்று
உண்மைநெறி காத்திட்ட உத்தமராம் இவரோ
கள்ளத்து எண்ணங்கள் கடுகளவும் இன்றிக்
கண்ணியத்தின் கருவிடமாய்க் காசினியில்த் திகழ்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105 ஆட்சியியல் தத்துவத்தை அழகுறவே அறிந்த
அறிஞரெனத் திகழ்ந்திட்ட அண்ணன்தங் கத்துரை
மீட்சியென இனத்திற்கு மிளிர்ந்திட்ட காதை
மக்களது மனங்களிலே மறையாதே என்றும்

106 தக்கதொரு தலைமையின்றித் தவித்திட்ட மூதூர்த்
தமிழர்தம் விடிவென்றே திகழ்ந்திட்டார் இவரும்
அக்கறையாய் மக்களுக்கு அரும்பணிகள் ஆற்றி
அழியாத இதிகாசம் ஆகிட்டார் புவியில்

107 ஆடையெனத் தமிழினத்தை அணிசெய்தே அவரும்
அரியபெரும் சேவைகளை ஆற்றிட்டார் அதற்காய்
நாடியவர் இனத்திற்காய் நற்பணிகள் ஆற்றி
நாட்டினிலே நற்புகழை நன்கடைந்து கொண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108 தங்கத்துரை எனும்நாமம் தனையுரைக்கும் போதில்
தீராத மகிழ்வினிலே திழைக்கிறதே உள்ளம்
பங்கமிலாப் பணிமூலம் பாமரர்கள் உள்ளம்
பூரிக்க நடந்தவரை புகழ்வோமே நாமும்

109 உன்னதமாம் தலைமைக்கு உதாரணமாய் இவரை
உரைத்திடுவர் மக்களுமே உண்மையிது அம்மா
தன்னுடைய நோக்கெல்லாம் தன்பதிகள் தன்னைத்
தரத்தினிலே உயர்த்துவது தான்என்றே வாழ்ந்தார்

110 சத்தியத்துத் தலைவரினைச் சாவடையச் செய்ய
சதிகாரக் கூட்டத்தார் சந்தர்ப்பம் பார்த்தார்
எத்தகைய சலனமதும் எப்போதும் இன்றி
எவ்விடமும் தங்கத்துரை ஏகியே வந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111 சண்முகாவின் மாடித்திறப் புவிழாவில் தானே
சரித்திரத்து நாயகனைச் சரித்திடுதல் வேண்டும்
வன்நெஞ்சக் கொடியோரும் விரைந்துமுடி வெடுத்து
வந்தங்கே வஞ்சகத்தை வினையாக்கி விட்டார்

112 ஆயிரத்துத் தொழாயிரத்து அமைதொன்னூற் றேழின்
ஆடிமாதம் ஐந்தாம்தே தியன்றவரும் சண்முகா
ஆயகலைக் கூடமாடிக் கட்டிடத்தின் திறப்பு
அருவிழாமுடித் துவெளிவந்தார் அகமகிழ்வாய்த் தானே!

113 அப்போதில் ஆங்குற்ற அரக்கர்மா கொடியோர்
ஆர்எவரோ கூலியென ஆகிட்டோர் ஆங்கே
துப்பாக்கியால் அண்ணனினைச் சுட்டிட்டார் இலக்காய்
துடிதுடித்தே அவ்விடத்தே துறந்தார்உயிர் அவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114 அண்ணனுடன் சேர்ந்தங்கே அதிபர்ரா ஜேஸ்வரி
ஆசிரியர் ஜீவரெட்ணம் அதிபரிவர் ஜோசப்
உன்னதபொறி யியலாளராம் இரத்தினரா சாவும்
உயர்வுறுகணே சலிங்கமுமே உயிர்தன்னைத் துறந்தனர்

115 தங்கத்துரை எனும் இந்தத் தனிப்பேற்றின் பிரிவால்
தம்கண்ணீ (ரை) மக்களுமே தரைமீதில் சொரிந்தார்
எங்குமிலாச் சோகமுடன் எடுத்தவரின் உடலை
என்றும் வா ழத்திருமலை யில் மக்கள் புதைத்தார்.

116 மண்ணதனில் மாதலைவன் மாண்டதனால் தமிழர்
மாவட்டம் திருமலையில் மாண்பிழந்து போனார்
கண்ணீரில் வாழ்வதனைக் கடத்தும் நிலைக்கானார்
கசடர்தம் காரியத்தால் கண்டபலன் ஈதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117 தீயோரின் கொடுமையினால் தங்கத்துரை தலைமை
தீர்ந்தேதான் போயினவே திருமலைக்கு அவர்போல்
தூயதொரு தலைமையினைத் தரவல்லோர் யாரோ!
தூயோனின் விதியென்றே துயர்கலைவோம் நாமும்

118 தங்கத்துரை பற்றிநானும் தந்திட்ட கவியில்
தவறேதும் இருந்தாக்கால் தவறாதெனக் கதனைப்
பங்கமெனச் சொல்லிடுவீர் பிழைதிருத்தி நானும்
பாங்காக மறுபதிப்பில் பதிப்பித்துத் தருவேன்

119 தங்கத்துரைக் காவியநூல் தாரணியில் என்றும்
தக்கபுகழ் பெற்றேதான் தழைத்தோங்கி வாழி
பங்கமிலா முறையினிலே பேர்பெற்றுப் புவியில்
பாங்குடனே நெடுங்காலம் பரிணமித்து வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120 தங்கத்துரைக் காவியநூல் கற்போரும் வாழி!
தகுமுறையில் அவர்புகழைச் செப்பிடுவோர் வாழி!
தங்கமென அவர்மகிமை தழைத்தோங்கி வாழி!
தாரணியில் அவர்நாமம் வாழியவே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்துரைக் குறள்

பங்கமே இல்லாத பாங்காம் தலைமையது
தங்கத் துரையினதே தான்

தங்கத் துரையின் தலைமையின் போதினில்
தங்கியோர் கண்டார் திருப்தி

தங்கக் குணமெல்லாம் தங்கிட்ட மாதளமாய்த்
தங்கத் துரையைத் தெரி

திங்களென எங்கும் தமிழர் தெரிந்திட்டார்
தங்கத் துரையவரைத் தான்

தங்கத் துரையெனும் தானைத் தலைவரவர்
தங்கமாம் நற்குணத்தில் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் துரையவர் தந்திட்ட சேவையெலாம்
எங்களது ஏற்றமென எண்ணு

தங்கத் துரைக்குத் தெரிந்ததே பல்பாசை
சிங்களமும் தேர்ந்தார் சிறந்து

எங்கும் புகழ்பெற்ற ஏற்ற தலைமையது
தங்கத் துரையினதே தான்

தங்கத்துரையின் தலைமை நிகரோர்கள்
இங்கரிதாம் எனறே இயம்பு

கங்குல் விரட்டும் கதிரோன் தலைமையது
தங்கத் துரையென்றே தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெங்கென நற்பலனைத் தங்கத் துரையவர்
இங்களித்தார் என்றே இயம்பு

தங்கத் துரையின் தலைமைத் தனமதுவோ
சிங்கத் தலைமைச் சிறப்பு

தங்கத் துரையின் தலைமைத் தமைதுவோ
பங்கமிலா தென்றே பகர்

தங்கத் துரையவரும் தன்தலைமை தன்னாலே
எங்கும் அடைந்தார் எழில்

தங்கத் துரையோ தகுதலைமை தன்னாலே
பொங்குபுகழ் பெற்றார் பெரிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் துரையின் தரமிக்க சிந்தனைகள்
வங்கக் கடலின் விரிவு

தங்கத் துரையின் தலைமையின் தன்மையோ
தங்க நிகராம் தெரி

கிளிவெட்டி மண்ணுக்கோ கீர்திதனை நன்கே
அளித்தோன் அவனாம் அறி

அடக்கம் அமைதி அருங்குணம் யாவின்
தடயம் தங்கா தெரி

இனவுறவின் பாலமென ஈங்குற் றவனும்
கனபுகழே கண்டிட்டான் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிக் கணக்கும் வெறுமையே தானாகும்
தங்கத் துரைக்கே தெரி

எங்கவர் சென்றாலும் ஏற்றமேதான் பெற்றிட்டார்
தங்கத் துரையவரும் தேர்

பங்கமது யார்க்கும் புரியாநற் தன்மையதில்
தங்கத் துரைவாழ்ந்தார் தான்

தானைத் தலைவன்தான் தங்கத் துரையென்று
சேனையும் செப்பிடுமே சேதி

தாய்நாட்டின் ஆட்சியலில் தங்கத் துரையவரோ
தூய்மையே காத்தார் துணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னடக்கம் கொண்டதனால் தங்கத் துரையவரும்
உன்னதமே பெற்றார் உணர்

தன்னின மீட்சிக்காய்த் தங்கத் துரையவரும்
இன்னுயிரும் ஈந்தார் இயம்பு

தமிழர் விடிவுக்குத் தங்கத் துரையும்
அமிர்தமாய் ஆனார் அவட்கு

தங்கத் துரையின் தலைமையது மக்களுக்கோ
தங்கத் தரமென்றே தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கத்துரை வெண்பா

(நேரிசை)

தங்கத் துரையெனும் தானைத் தலைவரவர்
தங்கக் குணமும் தகுபண்பும் - பங்கமிலாத்
தன்மையும் கொண்டதனால் தாரணியே மெச்சிடும்
உன்னதமே பெற்றார் உணர்.

தலைமைத் தனத்தின் தகுசான்று என்றே
நிலைத்த புகழினில் நன்கே - கலைகட்டி
ஓங்கிட்ட தங்கத் துரையின் மகிமை
ஈங்கே உயர்வாம் இயம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத நோக்கும் உயரிய சிந்தையும்
நன்றெனக் கொண்ட நாயகன் - என்றேதான்
தங்கத் துரையின் தனிச்சிறப்பைத் தாரணியும்
பங்கமின்றிச் சொல்லுகிறதே பார்

தங்கத் துரையெனும் தக்க தலைவனவன்
வங்கக் கடல்சூழ் வளமூதூர் - சிங்கத்
தலைவன் எனச்சிறந்து தாரணியில் மேன்மை
நிலையடைந்தான் என்றே நவில்

தங்கத் துரைதன்னைத் தந்ததோர் காரணத்தால்
எங்கும் கிளிவெட்டி ஏற்றமது - பொங்கும்
தளமாய்த் துலங்குகிற தன்மையதால் நாமும்
உளமே உவந்தோம் உணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னரும் சேவைகளால் தாரணியில் மக்களுளம்
நன்றெனவே நின்றிலங்கும் நாயகன் - என்றேதான்
தங்கத் துரையும் தனிமகிமை பெற்றிங்கே
தங்கினார் பேர்புகழில்த் தான்

தங்கத் துரையின் தலைமைத் தனமதுவோ
சிங்கத் தலைமைச் சிறப்பென்று - எங்கனுமே
மக்கள் புகழ்கின்ற மாண்பதனைப் பெற்றதனை
அக்கறையாய் எங்கும் அறை

தங்கத் துரையின் தலைமைத் தனத்திலே
பங்கமது உண்டோ பகன்றிட - எங்களால்
என்றும் முடியாதே! ஏற்றதோர் நற்றலைவன்
அன்றோ அவனும் அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் துரையோ! தகுந்த தலைமையினால்
பங்கமிலா நற்புகழைப் பெற்றேதான் - எங்களது
உள்ளம் நிறைந்து உயர்வுற்று உள்ளாரே
வெள்ளிபோல் வானுக்கே வாழ்த்து

தங்கத் துரையோ தகுதலைமை தன்னாலே
மங்காப் புகழினது மாபெரிய - பங்காளன்
என்றாகி நல்லபெரும் ஏற்றமெலாம் கண்டதனை
நன்கே அறிந்திடுவோம் நாம்

தங்கத் துரையின் தகுதலைமைத் தன்மையோ
வங்கக் கடலின் விரிவெனவே - எங்கும்
புகழது பெற்றேதான் பூரித் துளதைப்
பகர்வாய் இனிதே பதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் துரையின் தனிப்பெருமைத் தன்மையது
தங்கத் தரமாகத் தானுளதை - எங்கனுமே
மக்களெல்லாம் ஏற்றிடுவர் மண்ணில் மகிமையிதைத்
தக்கவைத்தார் தங்காவே தான்

அடக்கம் அமைதி அருங்குணம் யாவின்
தடயமே என்று திகழ்ந்த - விடயமே
தங்கத் துரையின் தனிப்பெரும் தன்மையென
எங்கும் இயம்பல் எழில்

எங்கும் அறிமுகத்தை ஏராளம் பெற்றிட்ட
தங்கத் துரையவர்கோ தாரணி - இங்கே
மரணமது இல்லையே மண்ணிலவர் நாமம்
நிரந்திரமாய் வாழும் நினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவுறவின் பாலமாய் ஈங்குற்ற தங்கா
கனபுகழைப் பெற்றதனைக் கண்டோம் - சனங்களது
உள்ளம் நிறையவரை உன்னதமாய்ப் பூவுலகும்
உள்ளவரைப் போற்றும் உணர்

தங்கத் துரையவரும் தந்தநற் சேவைகள்
எங்களின் ஏற்றமாய் என்றுமே - ஓங்கி
இவர்புகழை நாளும் இனிதே அறைந்தெம்
கவனத்தை ஈர்ப்பதனைக் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்துரைப் புகழ்ப்பா

## நேரிசை வெண்பா

தன்னரும் ஆற்றலால் தாய்த்திரு நாட்டினில்
உன்னதம் பெற்று உயர்தலைவர்-என்றான
தங்கத் துரையின் தனிச்சிறப்பைப் போற்றிடுமே
பங்கம் இலாமுறையில் பார்

## அறுசீர் கழிநெடிலடி

மாவலி நீரே பாயும்
மண்வளக் கிளிவெட் டியூரில்
நாவலர் அருணா சலத்தின்
நற்றவப் புதல்வ னாகி
ஆவலே இனத்தில் கொண்டு
அரும்பெரும் தலைமை தந்தார்
காவலே தமிழர்க் கென்ற
காத்திரப் புகழும் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் தங்கத் துரையின்
அருமைத் தலைமை தன்னால்
மண்ணும் மகிமை கொண்டு
மகிழ்வில் திளைத்த தம்மா
கண்ணியம் காத்து வாழ்ந்து
கடமையில் கருத்தாய் இருந்தார்
கண்ணென இனத்தைக் கருதிக்
கடும்பணி நிறையச் செய்தார்

காரியம் முடிக்கும் தன்மை
கூடவே அவரும் கொண்டு
பாரிய சேவை எல்லாம்
பதிகளுக் காற்றி நின்றார்
வீரியம் மிகைத்து ஓங்க
வியப்புறு செயல்கள் செய்தார்
சீரிய ஞானம் தன்னால்
சிந்தையின் தலைமை யானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் மனதை வெல்லும்
மந்திரத் திறமை கொண்டார்
தக்க தலைமை தன்னால்
தனிப்பெரும் புகழே பெற்றார்
அக்கறை கொண்டு மக்கள்
அல்லலைத் தீர்த்து நின்றார்
பக்கச் சார்பே இன்றிப்
பாங்குடன் நீதி காத்தார்

அரசியல் அரங்கில் அன்று
அதிசயம் என்றே ஆனார்
பரபரப் பாகும் வண்ணம்
பெரும்பணி நிறையச் செய்தார
உரமெனத் தன்னைத் தந்து
உயர்ச்சியை இனத்திற் களித்தார்
பெருமகன் இவரை என்றும்
புவியும் புகழ்ந்து நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் அமைதி ஓங்க
நன்றெனப் பாடு பட்டார்
வாட்டிய இன்னல் தன்னை
வருந்தா தேற்று நின்றார்
காட்டிய தலைமை தன்னால்
காத்திரத் தலைவர் ஆனார்
ஏட்டினில் பேர்புகழ் தன்னை
என்றும் எழிலாய்ப் பெற்றார்

கண்ணியம் கடமை யாவும்
கருத்துடன் காத்தே அவரும்
மண்ணினில் மகிமை பெற்ற
மாண்புறு தலைவர் ஆனார்
எண்ணிய எண்ணம் தன்னை
எழிலுறு செயலாய்த் தந்தார்
அண்ணன் இவரின் அரும்புகழ்
அழியா நிலைத்து ஓங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் பழகும் நல்ல
அருங்குணம் அமையப் பெற்றார்
இன்முக மாக என்றும்
இருந்தவர் இன்பம் கண்டார்
என்றும் பிறரின் ஏற்றம்
எண்ணி மகிழ்வே கண்டார்
நன்றே தலைமை தந்து
நம்முளம் நிறைந்தே உள்ளார்

தமிழர் முஸ்லிம் உறவின்
தனிப்பெரும் பாலம் ஆனார்
தமதாம் உணர்வு எல்லாம்
தாய்திரு நாட்டில் அமைதி
கமழ்ந்திட வேண்டும் என்றே
காத்திரப் பணிகள் செய்தார்
அமைதியின் உருவே ஆன
அண்ணனைப் போற்றி நிற்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரிய தலைமை தன்னால்
உன்னதம் பெற்றே உயர்ந்த
அயர்வே இல்லாத் தலைவர்
அண்ணன் தங்கத் துரையைக்
கயவரும் கொண்ட கொடுமை
காசினி மறையா தம்மா
துயரினில் பெருந்துயர் என்று
துலங்குவ திதுவே அம்மா

அண்ணனைக் கொன்ற கொடியோர்
ஆண்டவன் நியதி தன்னில்
உண்மையாய் மாட்டிக் கொள்வர்
உயரிறை மறக்க மாட்டான்
மண்ணினில் மாண்பே இல்லா
மாபெரும் கொடியோர் செய்கை
கண்ணினில் நீரை இன்று
கரைபுரன் டோடச் செயுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் துரையின் உயிரைத்
தீயோர் மாய்த்த போதும்
இங்கவர் நாமம் தன்னை
இல்லா தொழிக்க வொண்ணா
எங்கும் அவரின் நாமம்
ஏற்றம் பெற்றே என்றும்
தங்கிடும் புவியில்த் தானே
தீயர் யாது செய்வார்

மண்ணினில் மனிதர் வாழும்
மாநெடுங் காலம் எல்லாம்
அண்ணனின் பெயரும் நன்கு
அழியா நிலைத்து வாழும்
உண்மையின் தலைமை ஒன்று
உறங்கியே உள்ள தென்று
கண்ணீர்க் காவியம் தனையவர்
கல்லறை பாடி நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத தன்மை தன்னை
உயிரெனக் காத்து வாழ்ந்தோன்
தன்னுயிர் ஈந்தே இனத்தின்
தனிப்பெரும் சேவகன் ஆனோன்
அன்னோன் தங்கத் துரையின்
அரும்புகழ் நிலைத்து வாழி
நன்றென அவரின் நாமம்
நானிலம் வாழிய வாழி

**10-06-2016ம்திகதி அமரர்.அ.தங்கத்துரை அவர்களின் 19ஆவது நினைவு தினக்கூட்டம். தி/கிளிவெட்டி மகாவித்தியாலயத்தில் நிகழ்ந்த போது அதில் பாடிய புகழ்ப்பா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருங்கால சந்ததிகளாலும் வாழ்த்துரைக்கப் படுவாய்

- தங்கத் துரையே!
  உன் தலைமை
  தனிப்பெரும் அதிசயம்.

- இப்படியும் ஓர் உயரிய தலைமை
  இவ்வூரில் இருந்ததென்பதற்கு
  நீயே உதாரணமாகிப் போனாய்!

- உன் ஆற்றலையும் திறமையையும்
  உரைக்கும் போது
  வார்த்தைகள் கூட
  வனப்புறு கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தமிழர் தலைமைத் துவத்தின்
  தனிப்பெரும் அர்த்தமாய்
  ஆகிப் போன...நீ
  வருங்கால சந்ததிகளாலும்
  வாழ்த்துரைக்கப் படுவாய்!

- உன் பார்வையைப்
  பணத்தின் பக்கம் செலுத்திய
  செய்தியே கிடையாது

- எளிமையை ஆசித்த நீ
  என்றும்
  ஏழ்மை உள்ளங்களையே
  உவந்து நின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அகங்காரமும் மமதையும்
உன் வாழ்கை ஏட்டில்
என்றுமே இருந்ததில்லை

- சத்தியமே...... உந்தன்
சங்கதியாய் இருந்தது

- உன் ஜனனம் தான்
கிளிவெட்டி மண்ணின்
கீர்த்தியாய் ஆகிப் போனது

- இன்னும்
ஆயிரம் ஆண்டுகளின் பின்பும்
தலைமைத்துவ மகிமையின் வடிவமாய்
நீயே...மிளிர்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன் நினைவு
  மக்களின் உள்ளத்தில்
  கண்ணீரின்
  ஊற்றாய் உருவெடுக்கிறதே

- என் தந்தையின் நண்பனாய்
  மிளிர்ந்த உன் நினைவலைகள்
  என்னில் தந்தையின் ஞாபகமாகவே
  தழுவிக் கொண்டிருக்கின்றது

- அரசியல் பற்றி
  நான் அங்கலாய்க்கின்ற
  பொழுதுகளிலெல்லாம்
  உன் நினைவும்
  என் உளத்தடாகத்தில் அலைமோதுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன்னுடனான என் உறவுகள்
  எந்தன் உயரிய பேறென்றே
  என் உள்ளம் உரைத்துக் கொண்டிருக்கிறது

- நீதிக்குப புறம்பாய்
  உன் நெஞ்சம்
  நிலைகொண்டதே கிடையாது

- மனுதர் மத்தின்
  மலர் விடமாய் அல்லவா
  நீ மிளிர்ந்தாய்

- கண்ணியத்தையும் கடமையையும்
  உன்னைப் படிக்கும் போதுதான்
  அதிகம் அறிந்துகொள்ள முடிகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாற்று மதத்தவர்களும்
  மாமனிதன் என்ற
  மகத்துவப் போர்வையைத்தானே
  உனக்குப் போர்த்தினார்கள்

- இந்நாட்டில்
  தமிழ் சமூகத்தின்
  உரிமைகள் பற்றிப் பேசப்படுகின்ற
  ஒவ்வோர் இடத்திலும்
  தங்கத்துரை என்ற உன்நாமம்
  உயர்வாகப் போற்றப்படும்

- தலைமத்துவத் தகைமைகளால்
  அணிசெய்யப்பட்ட நீ
  தமிழர்களின் தலைமத்துவத்
  தேடல்களின் பொழுதுகளிலெல்லாம்
  போற்றப்படுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனித மனங்களை
  வசீகரிக்கும் ஆற்றல்
  உனக்கு வரமாகிப்போயின
  அதனால் எப்போதும்
  மானுட மலர்களால் சூழப்படும்
  மகத்துவத்தை
  உன் உடைமையாக்கிக் கொண்டாய்

- உன் உன்னத தலைமை காரணமாய்
  தங்கத்துரை என்ற நாமம்
  தங்கத்தின் வெகுமதியாகவே
  விளம்பப் படுகின்றது

- தங்கத் துரையே!
  உன் தலைமையின் ஜனனம்
  தமிழினத்தின்
  போலித்தலைமைகளின்
  புதை குழியாகவே புலர்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீ.....கதைத்தாய்
  வார்த்தைகள் வசந்தமுற்றன
  பிணக்குகள் தீர்ந்து போயின
  மனிதம் மதிக்கப்பட்டது

- நீ...காரியமாற்றினாய்
  மக்கள் தேவைகள் தீர்ந்தன
  அவர்களுக்கு
  உயர்ச்சிகள் உரித்தாகிப் போயின

- தமிழர் சமூகத்தில்
  உன் பெயரை உரைப்பது கூட
  கௌரவமாய்க் கருதப்படுகின்றது

- உன் அரசியல் அரியாசனத்தை
  பாமர மக்களின் பக்கத்தில் அமைத்ததால்
  அது பலம் பொருந்தியதாய்ப் பரிணமித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூதூர் பிரதேச தமிழ் மக்களின்
  அரசியல் பிரகடனமெல்லாம்
  தங்கத்துரை என்று தானே செப்பப்படுகிறது

- ஏழ்மையால் வாழ்துரைக்கப்பட்டவர்கள்
  அரசியலில் நல்லறுவடையைக் கண்டதெல்லாம்
  உன் தலைமைத்துவத்தில் தானே என்பதை
  நாம் புரிந்து கொண்டோம்

- சண்டைகளின் சந்தைகளில்
  சமாதானத்தின் வணிகனாகத்
  திகழ்ந்தவன் நீதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீ.....கதைத்தாய்
  சண்டைகள் சமாதானமாய்ச் சங்கமித்தன
  பிரச்சனைகள்
  பிரியமுடன்
  ஒற்றுமை ஓலமிட்டன

- உன் அரசியல் தலைமைக் காலம் தான்
  தமிழர்கள் தலைநிமிர்ந்த காலமாயும்
  தன்மானம் காக்கப்பட்ட காலமாகவும்
  வரலாற்றில் வாகை சூடிக்கொண்டது

- காயப்பட்ட
  தமிழ் இனத்திற்கு
  ஒத்தடமாய்த் திகழ்ந்தாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மொழிகள் உனக்கு வரம்
  ஆங்கிலமும் சிங்களமும்
  உன்னை அணிசெய்தன

- அரசியல் ஏடுகளெல்லாம்
  உன் கருத்துகளை
  ஆட்சியியல் சித்தாந்தங்களாகவே
  அங்கிகரித்துக் கொண்டன

- சுயநலங்களின் சொந்தமென
  ஆகிப்போன அரசியலுக்கு
  பொதுநலன்களின் பொக்கிசம் என்ற
  புது அர்த்தம்
  இங்கு.....உன்னால்த்தானே!
  உருவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- இந் நாட்டில்
தமிழ் சமூகம் வாழும் காலமெல்லாம்
அவர்களிடைத் தலைமைத்துவத் தேடல்கள்
ஏற்படும் பொழுதுகளிலெல்லாம்
ஆங்கு.....

- தங்கத்துரை என்ற நாமமும்
ஒலிக்கப் பட்டுக் கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறள்

* "தங்கத் துரைஎனும் தானைத் தலைவரவர்
தங்கமாம் நற்குணத்தில் தான்"

* "தங்கத் துரையின் தலைமை நிகரோர்கள்
இங்கரிதாம் என்றே இயம்பு"

* "தங்கத் துரையின் தலைமைத் தனமதுவோ
சிங்கத் தலைமைச் சிறப்பு"

* "தங்கத் துரையவரும் தன்தலைமை தன்னாலே
எங்கும் அடைந்தார் எழில்"

* "தன்னின மீட்சிக்காய்த் தங்கத் துரையவரும்
இன்னுயிரும் ஈந்தார் இயம்பு "

## நேரிசை வெண்பா

* தங்கத் துரையெனும் தானைத் தலைவனிங்கே
தங்கக் குணமும் தகுபண்பும் - சிங்கத்
தலைமையதன் சீரிய தன்மையும் கொண்டே
நிலைத்தான் புகழில் நினை.

* உன்னத நோக்கும் உயரிய சிந்தையும்
நன்றெனக் கொண்டிட்ட நாயகன் - என்றேதான்
தங்கத் துரையவர் தன்மையைப் போற்றிடுமே
பங்கம் இலாமுறையில் பார்.

மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-42444-4-3

ART Printers, Trincomalee. 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org